நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

### ஆழத்து முத்துக்கள் 05

# கலாவேந்தர் சாமுவேல் பெஞ்சமின்



பெஞ்சமின் ஐயா. நாடகத்துறை சார்ந்தோரிற்கு இவரைத் தெரியாதிருக்க முடியாது. கூத்து, இசைநாடகம், இலக்கிய நாடகம், நவீன நாடகம், நாட்டிய நாடகங்கள் என பெஞ்சமின் ஐயாவின் தொடர்புகள் விரிவுபட்டன.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்திலே வாழ்ந்த கபிரியேல் சாமுவேல் என்பவர் இவரது தந்தை. கைவினைத்திறனோடு கூத்துக்கலையிலும் சாமுவேலுக்கு ஈடுபாடிருந்தது இவர் கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்கள் பல ஆடியிருக்கிறார் பெஞ்சமின் 08.08. 1919இல் பிறந்தவர்.

பெஞ்சமினின் இளமைநாட்டம் சித்திரத்திலும் ஒப்பனையிலும் காணப்பட்டமையால் இவரது உறவினரான பிலிப்பும் டேவிற்றும் இவரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். தாம் ஒப்பனை செய்யச் செல்லுமிடங்களுக் கெல்லாம் இவரையும் உதவிக்கு அழைத்துச்சென்றனர். நாளடைவில் தானே தனித்து நின்று ஒப்பனை செய்யும் திறனைப் பெற்றுக் கொண்ட பெஞ்சமின் முதன் முதலாக 1939இல் நெடுந்தீவில் "கண்டி அரசன்" நாடகத்திற்கு ஒப்பனை செய்து புகழீட்டினார். நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு அண்ணாவியார் அக்கூத்தைப் பழக்கியவர்.

ஈழத்து நாடக வரலாற்றில் சிறந்த நடிகர்களெனப் பேசப்படும் இணுவில் நாகலிங்கம் (பூதத்தம்பிக்கு புகழ் பெற்றவர்) நல்லூர் சுந்தரம் (மயானகாண்டத்தில் அரிச்சந்திரனாகப்புகழ் பெற்றவர்) நெல்லியடி சுபத்திரையாழ்வார் (பெண் வேடத்திற் புகழ் பெற்றவர்)- என நீண்ட பெயர்ப் பட்டியலைக்குறிப்பிட்டு இவர்கள் அனைவருக்கும் தான் ஒப்பனை செய்தமையை நினைத்துப் பெருமைப் படுகிறார்

காணிவேல் கொண்டாட்டங்கள், ஆலயத் திருவிழாக்களில் மேடையேற்றங்கள் என்பன மேலோங்கி இருந்த காலத்தில் பெஞ்சமின் ஐயாவின் மண்டப அமைப்புக்கள், மேடை விதானிப்புக்கள் புகழ்பெற்றவையாக இருந் திருக்கின்றன. 75அடி உயரப்பந்தல், 40அடி நீள அகலத்தில் மேடை, அதற்கேற்ற காட்சித்தட்டிகள் எல்லாம் சேர்த்து 50ம் ஆண்டளவில் நடைபெற்ற 'காணிவேல்' நிகழ்வுகளில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில், கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் எனப் பல இடங்களில் மண்டபமும் மேடையும் அமைத்தார்.

தமிழ் நாட்டில் இருந்து இசை நாடகங்கள் கொண்டுவந்து இங்கு மேடையேறிய காலங்களில் அவர்களின் நுட்பங்கள் இவரது தொழிலுக்கு வலுச் சேர்த்திருக்கிறன. பொருட்களை விரிவுபடுத்த அவற்றைப் பார்த்த அனுபவம் கைகொடுத்திருக்கிறது. சாதாரணமாக திரைகளில் வீதிக்காட்சி, மாடிக் காட்சி, காடு என்பன போதுமானவையாக அக்காலங்களில் பாவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டு நாடகங்களின் வருகையின் பின்னர் அவற்றில் சித்திர நுணுக்கங்களும், நுட்பங்களும் ஏற்பட்டிருந்தன. வெட்டுக்காட்டுத் திரை உத்தி இந்த தமிழ்நாட்டு வருகையின் பின்பே ஏற்பட்டதாகப் பெஞ்சமின் ஐயா தெரிவிக்கின்றார். வீட்டுக்காட்சி, நந்தவனம், அரண்மனை எனக் காட்சித் திரைகள் தேவைக் கேற்ப விரிவுபடுத்தும் நிலைமை படிப்படியாகத் தோன்றியுள்ளது.

பெரும்பாலன பாடசாலை நாடகங்களில் ஒப்பனைக் கலை செய்வதற்கு இவரையே நம்பியிருப்பார்கள். இவரும் பணத்தின்மீது மட்டும் கண்ணாக இருக்காது, தனது திருப்திக்காகவும் அழைப்பவரை மதிப்பதற்காகவும் சளைக்காது சென்று பணியைச் செய்தார். யாழ்ப்பாணம் மட்டும் அல்லாது வன்னிப் பிரதேசம், குறிப்பாக மன்னார் போன்ற இடங்களிற்கு எல்லாம் சென்று தன்பணியைச் செய்திருக்கிறார். "நான் கஷ்டம் போனாலும் அதிலை ஒரு மனத்திருப்தி கொள்ளுவன்" எனத் தனது மேற்குறித்த நிலையை எடுத்துக் கூறுகிறார்.

உண்மையில் தொழில்சார் கலைஞராக வாழ்ந்து வருகின்ற பெஞ்சமின் ஐயாவின் மனத்திருப்தியும் அவர் தனது தொழிலில் பெற்ற அனுபவங்களும் ஒன்றை ஒன்று விஞ்சியே நிற்கின்றன. இவரது காலத்து நாடகங்கள், நாடகக்காரர்கள் அவற்றின் வரலாறுகள் என்பவை முக்கியமானவை. குறிப்பாக ஈழத்து நாடகப் போக்குகளின் பெரும்பகுதியை தன் அனுபவங்களால் கண்ட "ஒப்பனைக் கலைஞர்" தான் பெஞ்சமின் ஐயா. இவரது இந்த அனுபவங்கள் இன்னும் விரிவாகப் பகிரப்பட வேண்டும். கூத்தரங்கம் இவரை, இவரது அனுபவப் பகிர்வுக்காக இனம்காட்டச் செய்கின்றது.

இன்றும் இனியும் தொழில்சார் கலைஞர்களாக இருப்போருக்கு இவரின் வாழ்வும் அனுபவமும் உளமும் சொல்லும் அர்த்தங்கள் எல்லையற்றவை.

*உசாத்துணை:* கூத்தரங்கம் - இணையம்
ஈழத்தில் ஒப்பனைக்கலை - நூல்

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

www.thaiveedu.com